ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1947/15 - 2015 දෙසැම්බර් මස 29 වැනි අඟහරුවාදා - 2015.12.29

*1947/15 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (அத்தியாயம் 423) கீழான அறிவித்தல்**

குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 44 உடன் சேர்த்து வாசிக்கப்படுவதான செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 6அஆ இன் கீழ் எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கிணங்க, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், இலங்கையில் வதியும் நபர்களுக்கு செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 6அஆ இன் கீழான தேவைப்பாடுகளின் பிரயோகத்திலிருந்து பின்வரும் அளவிற்கு விலக்களிக்கப்படுவது தொடர்பாக பின்வருமாறு கட்டளையிடுகின்றேன் :

அ. 29.12.2015 இன் 1947/13 ஆம் இலக்க அரச வர்த்தமானியில் (அதிவிசேடம்) பிரசுரிக்கப்பட்ட, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 17இன் கீழ் நிதி அமைச்சரினால் வழங்கப்பட்ட அனுமதியினடிப்படையில் கையேற்கப்பட்ட, வைத்திருக்கப்பட்ட மற்றும் கைமாற்றப்பட்ட பிணையங்கள், மற்றும்

ஆ. 29.12.2015 இன் 1947/14 ஆம் இலக்க அரச வர்த்தமானியில் (அதிவிசேடம்) பிரசுரிக்கப்பட்ட, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 7இன் கீழ் செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்பட்ட அனுமதியின் கீழ் கையேற்கப்பட்ட மூலதனப் பண்புகளைக் கொண்ட வேறு ஏதேனும் சொத்துக்கள்.

ரவி கருணாநாயக்க,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு,
2015, திசெம்பர் 21 .

*1- 504*



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.